[22nd August 1961

Post-Graduate Studies (Medical)

* 1316 *Q.*—SRI P. G. MANICKAM : கனம் ரெவின்யூ அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) சென்னை ராஜ்யத்திலுள்ள வைத்திய கழகங்களின் பட்ட பிற்கால படிப்பில் ஈடுபடும் வைத்திய மாணவர்களுக்கும் மாணவிகளுக்கும் ஆராய்ச்சி வசதியளிக்கும் திட்டத்துக்காக ராக்பெல்லர் தரும நிதி ஸ்தாபனத்திலிருந்து உதவி அளிக்கப்பட்டிருக்கிறதா ?

(இ) அவ்வாறிருப்பின், எவ்வளவு தொகை உதவியாகக் கிடைத்தது ?

(உ) எந்தெந்த வைத்திய கழகங்களுக்கு இவ்வுதவி அளிக்கப்பட்டன ?

THE HON. SRI M. A. MANICKAVELU : (அ and (உ).—The Indian Council of Medical Research is getting fellowships from the Rockfeller Foundation and transmitting them to the post-graduate students in M.Sc. and Ph.D. in Anatomy in the Institute of Anatomy. Stanley Medical College, Madras.

(இ) Rs. 84,822.73 during the period from January 1954 to January 1959.

Mavuthu Mountain (disreservation of)

* 1317 .—SRI M. K. MARIAPPAN : கனம் உள்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) அரூர் தாலூக்காவில் மாவுத்து (unreserved) ரெவின்யூ மலையாக இருந்து வந்ததை கடந்த வருஷத்தில் பாரெஸ்டாக எடுத்துக் கொண்டதற்காக அப்பகுதி மலைச்சாதி விவசாயிகள் மீண்டும் அதை ரெவின்யூ மலையாக ஆக்கிக்கொடுக்கவேண்டுமென மகஜர் கொடுத்தார்களா ?

(இ) அப்படியானல், அதன்பேரில் என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (அ) Yes, Sir.

(இ) The matter is under consideration.

SRI M. K. MARIAPPAN : கனம் தலைவர் அவர்களே, இந்த மலையை ரெவின்யூ மலையாக இருந்ததை பாரெஸ்டாக ஆக்கினதினால் அங்குள்ள மலைவாசி விவசாயிகள் விவசாய சம்பந்தமாக ரொம்பவும் பாதிக்கப்படுகிறார்கள் என்பது பற்றி சர்க்கார் பரிசீலனை செய்து அதை மீண்டும், பாரெஸ்டு என்பதை நீக்கி, ரெவின்யூ மலையாக ஆக்க சர்க்கார் முயற்சிக்குமா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : அதுதான் போடப்பட்ட கேள்வி. இந்த விஷயம் அரசாங்கத்தின் பரிசீலனையில் இருக்கிறது என்று நான் சொன்னேன்.

Village Panchayat (appointment of Secretary)

* 1318 *Q.*—SRI V. K. KOTHANDARAMAN (on behalf of SRI A. R. MARIMUTHU) : கனம் முதல் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) கிராமப் பஞ்சாயத்துக்களுக்கு, கிராம அதிகாரிகளைச் செயலாளராக வைக்கவேண்டும் என்ற சர்க்கார் முடிவுக்கு எதிர்ப்பு ஏதேனும் உள்ளதா ?

(இ) அப்படியானல், அரசாங்கத்தின் முடிவென்ன ?

22nd August 1961]

THE HON. SRI C. SUBRAMANIAM : (அ) & (இ) There were some indications that provisions of the Government Order have been misunderstood. The misunderstandings have been cleared and there is no reason to believe that there is any opposition to the implementation of this order.

SRI S. M. ANNAMALAI : கிராமாதிகாரிகள் பஞ்சாயத்து போர்டின் கீழ் வேலை செய்வதற்கு முடியாது என்று சொல்கிறார்கள். கர்ணம், அவர்கள் பஞ்சாயத்து போர்டிலே ஒரு உறுப்பினராக இருக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டிருக்கிறார்கள். இதை சர்க்கார் பரிசீலனை செய்தார்களா ?

THE HON. SRI C. SUBRAMANIAM : இதையெல்லாம் பரிசீலனை செய்துதான் நாம் பஞ்சாயத்து போர்டு சட்டம் செய்தோம். இந்தப் பஞ்சாயத்து போர்டு சட்டப் பிரகாரம் இப்பொழுது நடவடிக்கை எடுத்துக் கொள்ளப்பட்டு வருகிறது. இதைப்பற்றி அவர்களுடன் விவாதித்து, இதை அவர்களும் ஒப்புக்கொண்டதாக எனக்குத் தகவல் கிடைத்திருக்கிறது.

Government offices (Madras City)

* 1319 *Q*.—SRI M. D. THIAGARAJA PILLAI (on behalf of SRI N. R. THIAGARAJAN) : சனம் நிதி அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

சென்னை நகரிலுள்ள சர்க்கார் காரியாலயங்கள் யாவற்றையும் ஒரே இடத்தில் வைக்க சர்க்காருக்கு உத்தேசமுண்டா ?

THE HON. SRI C. SUBRAMANIAM : தற்போது அதைப் போன்ற உத்தேசம் எதுவும் இல்லை.

Kuzhithurai Water-Supply Scheme

* 1320 *Q*.—SRI T. S. RAMASWAMI : Will the Hon. the Minister for Revenue be pleased to state—

(*a*) whether any scheme for water-supply to Kuzhithurai Municipality has been sanctioned by the Government, and

(*b*) if so, the details thereof?

THE HON. SRI M. A. MANICKAVELU : (*a*) & (*b*) The matter is under consideration and orders will be issued early.

Bridge across Manniyar

* 1321 *Q*.—SRI N. S. RAMALINGAM (on behalf of SRI T. R. RAMAMIRTHA THONDAMAN) : கனம் முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) தஞ்சை ஜில்லா, கும்பகோணம் தாலூகா பந்தநல்லூர்—மோழையூர் சாலை நெப்புக்கோயல் வழியாக மண்ணியாற்றில் பாலம் கட்டி கப்பிபோடத் திட்டம் உண்டா ?

(இ) எப்போது அது எடுத்துக்கொள்ளப்படும் ?

THE HON. SRI C. SUBRAMANIAM : (அ) No, Sir.

(இ) Does not arise.